# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்; திரு. க. சி. குலரத்தினம் ★ ஆனி 1981 ★ இதழ் - 66



## நாமும் நமது பெருமையும்

இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு, என்பன இன்றைய உலகில் அதிகமாகப் பேசப்பெற்று வருகின்றன. நூற்றைம்பது நாடுகளுக்கு அதிகமாகக் கூடுகின்ற ஐக்கிய நாடுகள் என்னும் நிறுவனத்திலேயே அவ்வவ் நாடுகளின் பண்பாட்டைப் பேணி வளர்க்க இயக்கங்கள் அமைந்துள்ளன. தமிழ்மொழியும் சைவசமயமும் உலகில் மிகப் பழமை வாய்ந்தவை என்று உலக நாடுகள் ஆராய்ந்து கண்டுகொண்டாடுகின்றன. எங்கே நல்லவர்கள் வாழுகின்றார்களோ அதுவே நாடு எனக்கணிக்கவேண்டியது என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஔவை யார் கூறியுள்ளார்.

"எவ்வழி நல்லவ ராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே!" என்பது அவர் வாக்கு. நாடு நாடாகத் திகழ்வேண்டுமாயின் மக்களை வாட்டும் பசிப்பிணியும் உடற்பிணியும், உட்பகையும் புறப்பகையும் இருத்தலாகா என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். "உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும் சேராதியல்வது நாடு" என்பது அவர் வாக்கு. நாகரிகம் என்றால் என்ன, பண்பாடு என்றால் என்ன என்றெல்லாம் திருவள்ளுவர் அருமையாக அமைவாக வகைப்படுத்திக் கூறியுள்ளார். திருவள்ளுவர் விழா ஆண்டுக்கொருநாள் கொண்டாடுதல் போதாது, அதை நாள்தோறும் கொண்டாடுதல் வேண்டும்.

நாகரிகம் என்பது உள்ளத்தின் உணர்வு. உணர்வு நல்லமுறையில் அமைந்தால் ஒருவன் மற்றவருக்கு மனம் நோவச்செய்யமாட்டான். ஒருவனுக்கு வேறொருவன் உணவில் நஞ்சுகலந்து வைத்ததை உணர்ந்தாலும் அவன் அந்த நஞ்சுகலந்த உணவை உண்பானேயன்றிச் சுட்டிக்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)




சாவகச்சேரியில் மரம்நாட்டும் பணியை ஊக்குவித்த மில்க் வைற் தொழிலதிபர் முன்னிலையில் டிரிபேக் கல்லூரி வளவில் சமூகத்தொண்டன் புத்தகவெளியீட்டின்போது மாவட்ட நீதிபதி விக்னேஸ்வரன் அவர்கள் மரம்நாட்டிவைத்தார்,

★ ஊக்கமுடையவனுக்கு நல்வழி தானே வருகிறது ★

ௐ

சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

**திருமாற்பேறு — திருக்குறுந்தொகை**

**திருச்சிற்றம்பலம்**

ஆலத் தார்நிழ லில்லற நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன் குற்றமில்
மாலுக் காரருள் செய்தவன் மாற்பேறு
ஏலத் தான்தொழு வார்க்கிட ரில்லையே.

கல்லால மரநிழலில் நால்வர் முனிபுங்கவர்களுக்கு நால்வேதம் ஆறங்கம் கூறும் உட்பொருளைச் சொல்லாமல் அமைவாகச் சொன்ன பெருமானும், குற்றமில்லாத திருமாலுக்குச் சக்கராயுதம் கொடுத்தருளிய பேரருளாளனுமாகிய இறைவன் எழுந்தருளியுள்ள திருமாற்பேறு என்னும் திருத்தலத்தில் வழிபாடுசெய்தால் துன்பங்கள் நீங்கிவிடும்.

திருமாற்பேறு என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமான் பெருமை பெரிது. அவரைத் தொழுவதால் வினைதேயும், இடரில்லை, பாவம் இல்லை, துயரம் இல்லை, கவலை தீரும், அல்லல் இல்லை, பொன்னுலகில் மன்னலாம், பரலோகம் பெறலாம்.




## இரவு

**பிறர் உதவியை நாடல்**

**கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்நின்று இரப்பவர் மேற்கொள் வது.**

ஒளியாமல் கொடுப்பவர் உலகத்தில் இருப்பதினுலே தான், ஒருவர் முன்னின்று இரத்தலை இரப்போர் மேற்கொள்ளுதல் வழக்கமாயிற்று.

## BEGGING

There is a charm even in begging, at the hands of those who understand their duty and do not falsely retend inability to help.

## யூன் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திங்கள் | — | கார்த்திகை விரதம் |
| | | | புதூர் நாகதம்பிரான் பொங்கல் |
| 2. | செவ்வாய் | — | அமாவாசை விரதம் |
| 3. | புதன் | — | நயினுதீவு, கந்தவனம் கொடி |
| 7. | ஞாயிறு | — | இணுவில் கந்தசாமி கொடி |
| 13. | சனி | — | ஏகாதசி விரதம் |
| 15. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 16. | செவ்வாய் | — | நயினுதீவு தேர் |
| 17. | புதன் | — | பூரணை விரதம் |
| 22. | திங்கள் | — | திருக்கேதீஸ்வரம் சங்காபிஷேகம் |
| 28. | ஞாயிறு | — | ஏகாதசி, கார்த்திகை விரதம் |
| 29. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |


## இலவச நூல்கள்

இலங்கையில் இலவசக் கல்வி முன்னும், இலவச நூல்கள் பின்னுமாக வந்து எல்லோரையும் படிக்கவைக்கின்றன. அரசாங்கம் பாடநூல்களை இலவசமாக வழங்குவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே கொழும்பு மாநகரசபையார் தங்கள் பரிபாலன எல்லைக்குட்பட வாழ்ந்த பல்லாயிரம் மாணுக்கர் மாணுக்கியருக்குப் பாடநூல்களை வழங்கிவந்தார்கள்.

★ ★ ★

இலவச நூல்கள் என்ருலும் கை நீட்டுகிறவர் எல்லோருக்கும் கொடுக்கக்கூடாது. நாட்டுக்கு நயந்தரும் நூல் ஒன்று பயிர் செய்யும் முறையைக் கூறுகிறது. பெறுமதி வாய்ந்த இந்த நூலை விவசாயக்குழுக்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் முதலிய நிறுவனங்களுக்கே கொடுக்கிருர். தனிப்பட்டவர்கள் தமக்கு அனுப்பும் வண்ணம் எழுதும்போது பார்சல் செலவுக்கு ரூபா இரண்டரை பெறுமதியான முத்திரை அனுப்பவும்.

★ பகுத்தறிவிலும் வல்லது விசுவாசம் ★



## பஞ்சதந்திரம்

வீரனும் அறிவாளியும் அழகிய பெண்ணும் செல்கிற இடமெல்லாம் சொந்த வீட்டிலிருப்பதேபோல் சகஜமாகவும் சிறப்பாகவும் நடத்தப்படுகிறார்கள். பிரகஸ்பதிபோல் ஒருவனுக்கு அறிவிருந்தாலும் செயலில் துணிவில்லாதபோது அது சாத்தியமாவதில்லை.

ஏழையாக இருந்தபோதிலும் செயலில் திடசித்தமுள்ளவன் உன்னதமான மதிப்பைப் பெறுகிறான். பணம் நிறைய இருந்தபோதிலும் சிறு மதிபடைத்தவர்கள் தாழ்வு அடைகிறார்கள்,

தங்கத்தால் செய்த கழுத்துப் பட்டை அணிந்தாலும் நாய் சிங்கத்துக்கு ஈடாகமாட்டாது.

உற்சாகம் முயற்சி தைரியம் உள்ள பலசாலிக்கு இமயமலை ஒரு எறும்புப்புற்றுப்போல இருக்கும்.

முயற்சியுடையவனுக்கு மேருமலை ஒரு உயரமில்லை, பாதாளம் ஒரு பள்ளமுமில்லை, சமுத்திரமும் கரையற்றதில்லை.

பணம் இருக்கிறது என்று ஏன் கர்வப்படுகிறாய்? பணம் இல்லை என்று ஏன் கவலைப்படுகிறாய்? அடிக்கப்பட்ட பந்துபோல் அதிர்ஷ்டம் எழும். விழும்.

மேகத்தின் நிழலும் துஷ்டனின் நட்பும் புதிய தானியமும், பெண்ணும் வாலிபமும் செல்வமும் சிறிது காலத்துக்குத்தான் இன்பமளிக்கின்றன.

## வெளிச்ச வீடு ஒன்று

துறைமுகங்களை அடுத்த கடற்கரைகளில் வெளிச்சவீடுகள் உள்ளன. பருத்தித்துறை, காங்கேயன்துறை, காரைநகர், தலைமன்னார், கொழும்பு, காலி, திருக்கோணமலை முதலிய இடங்களில் வெளிச்சவீடுகள் உண்டு. கடலில் வரும் கப்பல்களுக்குத் துறைமுகங்களை விளக்கஞ் செய்வதால் இவை கலங்கரைவிளக்கம் எனவும் பெயர்பெறும். முற்காலத்தில் காவிரிப்பூம் பட்டணம், முசிரி, கொற்கை முதலிய துறைமுகங்களின் கலங்கரை விளக்கங்களை, உரோமர் கிரேக்கர், அராபியர், சீனர் வெகுவாகப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள்.

இன்று உலகப்புகழ் பெற்று நிலவுவது பிரான்சில் பிரித்தானிக் கரையில் உள்ள 163 அடி உயரமுள்ள விளக்கமாகும். இது இன்று 50 கோடி மெழுகுவர்த்தி வெளிச்சம் காலுகின்றது. இது 1638 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 1939 இல் செப்பனிடப்பட்டதாகும்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நாமும் நமது........

காட்டமாட்டான். இந்த உள்ளத்தின் உயர்வே நயத்தக்க நாகரிகம்.

திருவள்ளுவர் கண்ட நாகரிகம் உருவாக்கிய பண்பாடு தமிழ்ப்பண்பாடு. பண்பாடில்லாதவர் அறிவுத் திறத்தால் அரம்போலும் கூர்மையாய் ஆணழகனாய் இருந்தபோதிலும் அவர் மரம்போன்றவர் என்று திருவள்ளுவரே கூறுகின்றார்.

''அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வார்
மக்கட்பண் பில்லாதவர்''.

பண்புடையார் பகையுண்டானபோதும் இனியகுணம் உடையவராகவே இருப்பர். பண்புடையாராலேயே உலகம் நிலைபெற்றிருக்கிறது-

இத்தகைய பண்புள்ளவர்களுக்கு ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று கணியன் பூங்குன்றனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாடியுள்ளார். இப்பண்பாட்டில் ஊறிய தமிழர் மலைகளைத் தாண்டியும் அலையெறி கடல்களைக் கடந்தும் அயல்நாடுகளுக்கும் தூரதேசங்களுக்கும் சென்றனர். இங்ஙனம் சென்ற நாடுகளில் தூர கிழக்கு நாடுகள் எனவும் தென்கிழக்கு ஆசியநாடுகள் எனவும் வழங்கும் நாடுகளும் ஒருசில.

இன்று மதத்தாலும் இனத்தாலும் நிறத்தாலும் மொழியாலும் வேறுபட்ட மக்களிடை பண்டைத் தமிழர், பழைய சைவர் முன்னர் விட்டுப்போன மிகப்பழைய வரலாற்றுச் சான்றுகளும் வாழ்க்கை வழக்கங்களும் இன்றுவரை அழியாமல் நிலவுகின்றன. அக்காலத்தில் பொதுவாக இந்தியரும் சிறப்பாகத் தமிழரும் பர்மா, மலாயா, சாவகம், சுமத்திரா, தாய்லாந்து முதலாய நாடுகளுக்கு வணிகர்களாய்ச் சென்றுவந்தார்கள்.

ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பின்னாக சொலமன் தீர்க்கதரிசி என்பாரின் காலத்தில் தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து தங்கமும் தந்தமும் மந்தியும் மயிற்பீலியும் மெசப்பொட்டோமியாவுக்கு ஏற்றுமதியாயின. தேக்கும் இஞ்சியும் மஞ்சளும் மிளகும் முத்தும் இன்ன பிறவும் பபிலோனியாவுக்கு ஏற்றுமதியாயின. ஒகஸ்ரஸ் சீசர் உரோமாபுரியில் பேரரசைப் பரிபாலித்த காலத்தில் தமிழ்நாட்டுப் புடைவை வகைகளில் மெல்லிய ஆடைகளையும் அந்நாட்டுப் பெண்கள் பெரிதும் விரும்பினர். இங்ஙனமே இப்பொருள்கள் பல சீனரிடையேயும் பெருமதிப்புப் பெற்றிருந்தன.

இத்தகைய வணிகக் கூட்டுறவால் தமிழ்ப்பண்பாடு உலக வியாபகம் பெற்றிருந்தது. வர்த்தகத்துறையில் சமர்த்தர்களாய் இருந்த அராபியர்களும் தமிழ்ப்பண்பாட்டை நன்கறிந்திருந்தனர். அவர்களைப் பின்பற்றிய இத்தாலியர், போத்துக்கேயர். பிரென்சுக்காரர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலான ஐரோப்பியரும் தமிழ்ப்பண்பாட்டை நன்கறிந்தனர்.

★ மனதிலிருந்து மறைந்து போகாதிருப்பது நம்பிக்கை ★

# தமிழ்த் தூது

தூது என்பது தமிழிலுள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. அது உலா, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ் முதலியவற்றின் வரிசையில் உள்ளது. தூது பிரபந்தமாக உருப்பெறமுன்னமே பழைய தமிழ்ப்புலவர்கள் நாரை, அன்னம், கிளி, முதலிய உயிரினங்களைத் தூது விடுத்துத் தனிப்பாடல்கள் பாடியுள்ளார்கள்.

வடமொழியில் மேகசந்தேசம், ஹம்ஸ சந்தேசம் முதலிய பிரபந்தங்கள் உள்ளன. மத்தியகாலச் சிங்களப் புலவர்கள் மைனு, புரு முதலிய பறவைகளைத் தூது விடுத்துப் பாடிய பிரபந்தங்களும் இனிமையானவை. தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர் என்பார் மலைநாட்டு மைனுவைத் தூதுவிட்டுப் பாடிய பிரபந்தம் ஸலலிஹினி எனப் பெயர்பெற்றது.

முன்னர் வருணபகவான் இலங்கையின் காவல்தெய்வமாகவும், பின்னர் விஷ்ணு அப்பதவியை வகித்து, பின் விபீஷணன் அதனை ஏற்ருர் என்பதும் சிங்களவரின் நம்பிக்கை. இந்தவகையில் விபீஷணனிடம் முறையிட்டு அரசகுமாரிக்கும் பிள்ளைவரம் கேட்டுவருமாறமைந்த பிரபந்தத்தில் சைவமணம் கமகம எனக்கமழ்கின்றது. சிங்களவர் சிவனை ஈஸ்வர என வழங்கி வணங்குவர் என்பது மகிழ்ச்சிக்குரியது. ஒருகாலத்தில் இலங்கையெங்கும் ஈஸ்வரங்கள் இருந்தன. H. ஜெயசிங்க, L. C. வான்ஜீச என்பார் அருமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அமைவுஇது: Now perch in the beautiful Ishvara Devalaya. Here fumes of camphor and aloes rows of banner wave. Thunder of Conch and Miridanga and clangour of bells fill the wild air, and people devotly sing Tamil hyms of praise.

தமிழ்ப்பற்றுடைய புலவரொருவர் மதுரைச் சொக்கநாதப்பெருமானிடம் தமிழைத் தூதுவிட்டமை தமிழ்விடு தூது என்னும் பிரபந்தத்தால் அறியக்கிடக்கிறது. இந்நூலை உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் 1941ம் ஆண்டில் அரும்பதவுரையுடன் அழகாக வெளியிட்டுள்ளார்.

தமிழ் வளர்த்த தனிநாயக அடிகள் தமிழருமையை உலகறியச் செய்தபெருமையில் தமிழ்ப்பற்றுக் காரணமாக எழுதிய நூல் தமிழ்த் தூது என்பதாகும். தமிழ்த் தூது என்னும் கட்டுரையை எஞ்ஜிஞகப் பூட்டி ஆறு பெட்டிகளைப் பூட்டி ஓடவிட்ட வண்டி தமிழ்த்தூது, அதில் தமிழ்தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, மலரும் மாலையும், காப்பியக் கவிஞர் வீரமாமுனிவர், தமிழ்நாட்டின் ஆசிரியர் வேதநாயகம்பிள்ளை, தமிழரும் அவர்தம் கவின்கலைகளும், தமிழ்கூறும் நல்லுலகம் என்பன கட்டுரைத் தொடர்களாகும்.

இருபதாண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் நான்கு பதிப்புகள் வெளிவந்த தமிழ்த் தூது உலகமெங்கும் பரவி வியாபகமுற்றது. தமிழின் உலக வியாபகத்தை அமைவாகக் கூறும் இந்நூல் தமிழ்த்தூது எனப் பெயர்பெற்றதும் ஓர் அமைவு.

ஆங்கிலம், இத்தாலி, பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன், இலத்தீன், கிரீக்கு, வடமொழி, ரஷ்யன், போச்சுக்கீஸ், முதலிய பல மொழிகளறிந்த தனிநாயக அடிகள் உலகஞ்சுற்றிய தமிழர். தாம் தூதுவிட்ட நூல் உலகத்தைச் சுற்றிவர தாமும் பின்தொடர்ந்து சுற்றியமை மணியோசை முன்னும் யானை பின்னும் போனவழியைப் போன்றதாகும்.

தனிநாயக அடிகளாருக்குத் தமிழ்ப் பைத்தியம் உண்டாக்கியவர்கள் சைவத் திருமுறையாசிரியர் இருபத்தேழு புலவர் பெருமக்களில் இறுதியாக வாழ்ந்த சேக்கிழார் பெருமாஞவர். சேக்கிழார் தமிழை அடைமொழியில்லாமல் பாடவில்லை என்று எடுத்துக்காட்டுபவர் தனிநாயகம் அடிகள். செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ் அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில் தமிழ், தேன்பொழியும் தமிழ் என்பன சேக்கிழார் கொடுத்த அடைகள், தேவாரம் என்ருல் என்ன என் பதை தமிழ்பாடியறைந்தார், தமிழ்மாலைகள் சாற்றினுர் எனவருந் தொடர்களில் தனிநாயக அடிகள் தம்மை மறந்து சொக்கிஞர்.

---

# நாடும் நாட்டு வளமும் — நோர்வே

இலங்கைக்குக் கைகொடுக்கும் நாடுகளில் வடபிரதேசத்தில் பெரும் பெயர் பெற்றது நோர்வே நாடு. சீநோர் என்பதை Cey - Nor என எழுதினுல் சிலோனும் நோர்வேயும் இணைந்தமை புலப்படும். வட ஐரோப்பாவில் ஸ்காந்திநேவிய நாடுகளில் மலைவளமுள்ள வெறுந்தரை நாடு நோர்வே. ஆறுகளும் ஏரிகளும் உள்ள நாட்டில் காற்பங்கு அடர்ந்த காடாயுள்ளது. குடிசன மடர்த்தியின்றிப் பரவலாக அந்நாட்டவர் வாழ்கின்ருர்கள். துருவமான் வளர்க்கும் லாப்லாந்திய மக்களும் அங்குள்ளார்கள். இரண்டாம் மகாயுத்த காலத்தில் ஹிட்லர் நோர்வேயைப் பிடித்து ஐயாண்டுக் காலம் ஆட்சி நடத்திஞர்.

இன்று நோர்வே பொருளாதார வளர்ச்சியில் வெகுவாக முன்னேறி வருகிறது. வடஅத்துலாந்திக் பாதுகாப்பில் நாடு தங்கியுள்ளது. கலை கலாசாரச் சிறப்புள்ள நாட்டில் 320 நூதனசாலைகள் உண்டென்பர். அங்கே 5000 நூலகங்கள் மாணுக்கர்களுக்கு உதவுகின்றன. ஆண்டுதோறும் 2500 நூல்கள் வெளிவருகின்றன. நாள்தோறும் வெளிவரும் எட்டுப் பத்திரிகைகள் நல்ல தரமானவை.

நோர்வேயில் கால்நடை வளர்ப்பு அதிகம். கடலில் மீன் வளத்துக்கும் குறையில்லை. ஆண்டுதோறும் 30,00000 தொன் மீன் பிடிக்கிருர்கள். நோர்வேயில் அலுமினியம் அதிகமுண்டு. அங்கே தனியார்துறையிலமைந்த தொழிலகங்கள் பலவுள்ளன.

---

நிலைமை தாங்கமுடியாத அளவுக்குக் கஷ்டமாகும் போதுதான் கடவுள் நம்பிக்கையின் உறுதி, உறுதியின்மையைக் காணலாம்.

— மகாத்மா காந்தி

---

★ அமைதியாயிருப்பது வலிமையிலும் மேலானது ★

# அண்ணாமலைக்கு அரோகரா

ஆதிதேவர் அண்ணாமலையில் எழுந்தருளிய அற்புதத் திருக்கோலத்தைக் காணச் சென்ற திருநாவுக்கரசுநாயனார் இறைவனைக் கண்டவுடனே கண்ணீர் பெருக்கிச் சோதியே சுடர்மழுப்படையினானே ஆதியே அமரர்கோவே அணியண்ணாமலையுளானே நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவிலேனே என்று பாடினார். நீலகண்டனே, அண்டனே, அமரர் கோவே, தொண்டனே உன்னையல்லாற் சொல்லுமா சொல்லிலேனே என்றார். தேவரீரின் திருவடியில் தோய்வதேயன்றி வேறோர் தோய்வும் அறிகிலேனே என்றும்; உன்னையல்லால் ஏதும் நினைப்பு இல்லேனே என்றும், உன்திருவடிகளை மறப்பிலேனே என்றும், உன் திருவடியையன்றி வேறொன்றிலும் பற்றிலேனே என்றும் பாடினார்.

அப்பர் இரண்டாம்முறை அண்ணாமலைக்குச் சென்றபோது அவரை மறந்து உய்யமுடியாது என்று தொடங்கிப் பாடியபோது, இறைவன் திருவண்ணாமலைவடிவினன், வானவருள் உயர்ந்தவன், பிறைசூடிய பெருமான், தேனென இனிப்பவன், பன்றிக்கொம்பை அணிந்தவன், சிவலோகத்தவன், ஆகாயத்தை வடிவாகக்கொண்டவன், திருமாலாகிய விடையை ஊர்பவன், ஊமத்தை மலரை அணிந்தவன், யானைத்தோலைப் போர்த்தவன், அநாதி முத்தன், சிந்தையைக் கோயிலாகக் கொண்டவன், இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன், காற்றாகியுள்ளவன், வினைகளை நீக்குபவன், நன்மை தீமைகளை வகுத்தவன், சமயநெறியாய் இருப்பவன், மின்னொளியுருவானவன், என்னை உடையவன், மன்றங்களில் திருக்கூத்தாடுபவன், தக்கன் வேள்வியைத் தகர்த்தவன், புலனைந்தும் வென்றவன், வீரன், விடம் உண்டவன் விண்ணவர்க்கு அச்சம் நீக்குபவன், மலைவடிவினன், மருதநிலத்தவன், ஆத்திமாலை சூடியவன், வீரத்துக்கு உறைவிடமானவன், விண்ணவரை ஆட்கொள்பவன், கருவாயிருந்து காப்பவன், உருவத்திருமேனி கொள்பவன், உலகைத் தோற்றுவித்தவன், அருவம், அருவுருவம், உருவம் என்னும் நிலைகளைக் கடந்தவன், நற்பேறுகளின் பொருளாய் இருப்பவன், நோய்களை நீக்குபவன், தன்னிலை திரியாதவன் இத்தன்மையனை அடியேன் மறந்து உய்வதெங்ஙனம் என்று பாடினார்.

அப்பர் அண்ணாமலையில் அடுத்துப் பாடிய திருப்பதிகத்தில் திருவண்ணாமலையை அண்டமூர்த்தியின் திருவுருவென்பர். இறைவனை விடையேறுபவன் என்றும் பலிக்குத்திரிபவன் என்றும் பாடுவர். அட்ட மூர்த்தியாயுள்ள இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியவற்றில் உள்ளான். அவனைத் தொழுதால் வினைகள் நீங்கும் என்பர்.

அட்டமூர்த்தியண்ணாமலை கைதொழக் கெட்டுப்போகும் வினை கேடிலை காண்மினே என்பர். அண்ணாமலையைத் தொழுவதனால் நற்றவத்தோடு ஞானத்திருக்கலாம் அல்லல் தீர்க்கும் அண்ணாமலைகைதொழ நல்லவாயின நம்மை அடையுமே. ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போகும் நம்மேலை வினைகளே. தேடிச்சென்று திருவடியேத்தினால் நாடிவந்து நம்மையும் ஆட்கொள்வர். அட்டமூர்த்தி அண்ணாமலைமேவிய நட்டம் ஆடிய நண்ணநன்காகுமே. ஆணிப் பொன்னன்ன அண்ணாமலை கைதொழப் பேணிநின்ற பெருவினை போகுமே. மறையினானொடு மாலவன் காண்கிலா நிறைவு நீர்மையுள்நின்றருள் செய்தவன் உறையும் மாண்பின் அண்ணாமலை கைதொழப் பறையும் நாம் செய்த பாவங்களானவே.

மாணிக்கவாசக சுவாமிகள் அண்ணாமலையைப் பாடும்போது அடிமுடி தேடி அலுத்துப்போன திருமால் பிரமனை நினைவூட்டுவர். சிவபெருமானின் திருவடிகளே நமக்குத்தஞ்சம் என்றும், அவை எங்கும் பரந்தவை என்றும் அவை ஆதியாம் பாதமலர் என்றும், அந்தமாம் செந்தளிர்கள் என்றும், அவை இருள்போக்கும் ஒளிப்பிழம்பாயும் மருள்நீக்கும் மலராய் மலர்ந்துள்ளன என்றும் பாடுவார்.

திருவண்ணாமலை அக்கினிஸ்தலமாயினும் அது பஞ்சபூதஸ்தலம் என்பர். பூதங்கள் தோறும் நிற்பவராய இறைவன் அங்கே காளத்திநாதர், ஏகாம்பரேஸ்வரர், சிதம்பரலிங்கேஸ்வரர், ஜம்புகேஸ்வரராயும் இருக்கிறார் என்று சைவ எல்லப்ப நாவலர் அழகாகப் பாடுகிறார்.

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியய மானனிவர் சோமனிவர் — ஆதவனும்
மண்ணுங்கா லும்புனலும் வானுமழல் தானுமிவர்
எண்ணுங்கால் எல்லாம் இவர்.

# நான்சி அஸ்ரர் சீமாட்டி

சிட்னிவெப் இலங்கைப் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கிய வைபவத்தை எங்கள் நாட்டுத் தாய்க்குலம் பெரும்பேறெனக் கருதியிருப்பார்கள். ஆனால் இங்கிலாந்திலேயே பெண்களுக்கு வாக்குரிமை 1918ம் ஆண்டிலேயே முதன்முதலாக வழங்கப்பெற்றது. இங்கிலாந்தில் ஆண்கள் 700 ஆண்டுகாலமாகப் பாராளுமன்றம் தங்கள் பாரம்பரிய ஏகபோகம் எனக்கருதிய காலத்தில், 1919ம் ஆண்டில் அவர்கள் மனக்கோட்டையைத் தகர்த்துத் தவிடுபொடியாக்கித் தெரியப்பெற்ற பிரதிநிதியாய் பாராளுமன்றத்தில் முதன்முதலாக நுழைந்தவர் நான்சி அஸ்ரர் என்னும் சீமாட்டியாவர். அன்று நுழைந்தவர் ஏழு தேர்தல்களில் மீண்டும் மீண்டும் வெற்றிபெற்று 1944ம் ஆண்டுவரை பாராளுமன்ற அங்கத்தவராய்ப் பணியாற்றினார். அவர் இங்கிலாந்தின் பாராளுமன்றப் பாரம்பரியத்தையும் அதன் பண்பாட்டினையும் பாராட்டத் தவறவில்லை. வெளிநாட்டவராய தம்மை, அவர் அமெரிக்காவில் வெர்ஜினியா மாநிலத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலேயர் வெகுவாக ஆதரித்துத் தங்களுள் ஒருத்தியாக அரவணைத்தார்களே என்று இதயபூர்வமாக நன்றிகூறினார். பிரித்தானியாவில் மதுபானக் கடைகளை ஒதுக்கி, 18 வயதுக்குட்பட்டவர் அருந்துவதைத் தடைசெய்தவர் அவர்,

வறுமைக்குள் அமுக்கப்பட்டிருப்பவன் வறுமையாய் வாழ வேண்டுமென்று வறுமையை மேற்கொள்பவனல்ல.

— மகாத்மாகாந்தி

★ நிறைஞானி பேசாதிருந்து புகட்டுகிறான் ★

## துகளறுபோதம்

சீகாழிச் சிற்றம்பலநாடிகள் அருளிச் செய்த துகளறு போதம் சைவசித்தாந்தத்தின் முடிபாகிய சிவாநந்தாநுபவத்தைக் கூறுவது. குற்றமற்ற ஞானம் எனப் பொருள் தரும் இந்நூல், குற்றங்களை அறுப்பதுமாகும். துகள்கள் ஏதும் இல்லாதவர் இறைவன். ஆன்மாக்களுக்குரியதுகள் ஆறுவகைப்படும். துகள் அறுப்பவர் இறைவன். சித்த மலம் அறுவிக்கும் வகையில் துகள் அறுத்து எழுபவர் சோதி. கன்மத்துகளறுத்து என்பது சித்தாந்தம் ''துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்தநற்சோதி.''

உமாபதி சிவாசாரியர் ஞானபரம்பரையில் வந்த சீகாழிச் சிற்றம்பலநாடிகள் என்பார், திருச்செந்தூரகவல் பாடிய சிற்றம்பலநாடிகளின் வேருவர். துகளறு போதம் என்னும் பழைய நூலைச் சிவஞான முனிவர் முதலானோர் பலவிடங்களிலும் அதிகமாகக் கையாண்டுள்ள போதிலும் இதன் பெருமையையுணர்ந்து இதற்கு உரை எழுதுவதற்கு எவரும் முன்வராதமை கண்டு யாழ்ப்பாணத்து அச்சுவேலியையடுத்த திக்கம் என்னும் ஊரினரான சைவப் பெரியார், ஈசானசிவம் என்னும் தீட்சா நாமமுடைய சித்தாந்தச் செம்மல் சி. செல்லையா அவர்கள் சிறந்த உரையெழுதி முப்பது ஆண்டுகளுக்குமுன் வெளியிட்டுள்ளார்.

உரையாசிரியர் திக்கம் செல்லையா அவர்கள் வழிபடு தெய்வமாய கந்தவனத்துக் கதிர்வேலாயுத மூர்த்தியையும் பொன்னம்பலத்து ஆடலிறையையும் வணங்கித்தம் ஆசிரியப் பெருமானாகிய வேன்மயில்வாகனப் புலவரையும் துதித்துள்ளார். ''நந்தமியற்றமிழ்த் தேசிகன் வேன்மயில் வாகனனைப் பைந்துணர்கொண்டு பரவிப் புகழ்ந்து பணிகுவமே'' என்று பாடியுள்ளார். வேன்மயில்வாகனப் புலவர் என்பார் கந்தவனத் திருக்கோயிலாதீன கர்த்தராய் அருள் தமிழ் வல்ல புலவராயிருந்த பெருமையை நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அழகாகப் பாடியுள்ளார்.

நூறு பாடல்களமைந்த துகளறு போதத்துக்கு நுணுக்கமாக உரையெழுதியதோடு நல்லதொரு முகவுரையையும் எழுதிச் சைவத்திறன் தெரியவைத்த திக்கம் செல்லையா அவர்கள் பல சித்தாந்தக் கட்டுரைகள் எழுதியதோடு, பெரிய புராணத்திலும் ஈடுபாடுகொண்டு அரிய பல கருத்துக்களைக் காலந்தோறும் வெளியிட்டுள்ளார். சைவப் பற்றுள்ள இவர் தம்பிள்ளைகளைத் தேவாரப்பண் பயிலவைத்தமை சைவத்தொண்டு எனப் போற்றத்தக்கதாகும்.

## கருவூர்த் திருக்கோயில்

மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டிற் பிரகாசித்த காலத்தில் 1897 ஆம் ஆண்டளவில் பெரும் பொருட் செலவில் பழுதுபார்க்கப் பெற்றுக் கும்பாபிடேகம் நடந்த கருவூர்த் திருக்கோயிலைப் பற்றித் தேவகோட்டை நகரத்தார் வேண்டிக்கொண்டதற்கிணங்கி ஆராய்ந்து எழுதியுதவினர்.



## நாவலர் பாரம்பரியம்

நாவலர் பாரம்பரியம் சைவப் பாரம்பரியம், கந்தபுராண கலாசாரம், ஆகமாந்தம், மிகுசைவத்துறை எனப் பலவாருகத் தொடர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். சென்ற மாதம் தெல்லிப்பழையில் தங்கள் பவள விழாக் கொண்டாட வந்த சென்னை சைவசித்தாந்த சமாஜத்தவர்கள், பெரியவர்கள், பேராசிரியர்கள், நாவலர் நூல்களுக்குத் துடியாய்த் துடித்தார்கள். கந்தபுராணம் கிடைக்குமா என்று கெஞ்சினுர்கள்; ஞானப்பிரகாச தேசிகர் எழுதிய சிவஞானசித்தியார் உரை கிடைக்குமா என்று தவித்தார்கள். திருவிளங்கம் ஐயா எழுதிய நூல்களை எங்கே வாங்கலாம் என்று துடித்தார்கள்.

காலந்தோறும் பல்லாயிரம் ரூபா செலவிட்டுச் சைவத் தமிழ் நூல்களை அடக்கவிலையில் விநியோகித்த நாராயணசாமி என்னும் அன்பர் குழந்தைபோலக் கைகுவித்து நாவலர் எழுதிய நித்தியகருமவிதி நூற்றுக்கணக்காக வேண்டும் என்று மில்க்வைற் தொழிலதிபரிடம் பெற்றுப் பூரிப்புடன்போன காட்சி நாவலரை நினைவுபடுத்தியது. இந்தப் பெரிய சமாஜம் நாவலர் நூல்களைப் பதிக்கத் தெரியாமல் அல்ல. அதன் பதிப்புரிமையில் கைவைக்கக் கூடாது என்று கூசியே இவ்வாறு கைகுவித்தார்கள். சுருப்போட்டு இருல் பிடித்தமாதிரி பெரிய நூல்களை அள்ளிக்கொடுத்த நாராயணசாமி அவர்கள் சின்னஞ்சிறிய வெளியீடுகளை மார்போடணைத்துப் போனுர். இவை சைவப் பிரசாரத்துக்காகும் என்ருர். கந்தபுராணத்திற்குச் சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையும் பண்டிதமணியின் தட்சகாண்ட உரையும் பெருமதிப்புள்ளன என்றனர். அவை கிடைக்கவில்லையே என வருந்தினர். நம்மவர் இவற்றை மறுபதிப்புச் செய்தால் ஏற்றுமதி செய்யலாம். கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் காஞ்சிபுரத்தில் கந்தபுராணத்தை அரங்கேற்றிய காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் ஒரு ஏட்டுப்பிரதி வந்தது. அது ஒன்ருய்ப் பலவாய்ப் பல்கிப் பெருகி நாடெங்கும் பரந்தது; நாவலரவர்கள் அதனை நன்ருக அச்சிட்டார்கள். அதன் இரண்டாம் பதிப்பு அவர் மாணுக்கர் ஒருவரால் 1883 இல் வெளிவந்தது. நாவலர் பதிப்பை மாசுபடுத்தாமல் கந்தபுராணம் பதிக்கப் பெறுதல் வேண்டும். கந்தபுராணம் சைவப் பண்பாட்டைக் காத்து வருகிறது.

---

இம்சை பலவீனர்களுடைய ஆயுதம்; அகிம்சை பலவான்களுடைய ஆயுதம்.

— மகாத்மா காந்தி

---

★ பண்பட்டவர் உலகத்தோடு இணங்குவர் ★

## தமிழில் வழங்கும் வடமொழி சில

| | |
|---|---|
| நிஜம் | உண்மை |
| நிச்சயம் | உறுதி |
| நிட்களம் | கலப்பின்மை |
| நிட்காமியம் | பயன்கருதாமை |
| நிட்டூரம் | கொடுமை |
| நிட்டை | தவநிலை |
| நிதானம் | மதிப்பு |
| நிதி | செல்வம் |
| நித்தியகருமம் | நாட்கடன் |
| நித்தியத்துவம் | அழிவின்மை |
| நித்தியம் | எப்பொழுதும் |
| நித்தியானந்தம் | பேரின்பம் |
| நித்திரை | உறக்கம் |
| நித்திலம் | முத்து |
| நிந்தனை | பழிப்பு |
| நிபந்தனை | கட்டுப்பாடு |
| நிபாதம் | விழுதல், பதிதல் |
| நிபுணர் | வல்லவர் |
| நிமலம் | அழுக்கின்மை |
| நிமித்தம் | காரணம் |
| நியதி | ஒழுங்குமுறை |

## சுகவாழ்வு

நோயணுகா விதிகளை அனுட்டித்து உடம்பைப் பாதுகாத்தல் சித்தமார்க்கம். அது ஆயுர்வேதமுமாகும். உடம்பால் அழிகுவர் உயிரால் அழிகுவர். திடம் பெற மெஞ்ஞானம் தேடவும்மாட்டார். உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே என்பது திருமந்திரம் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம். உள்ளமும் உடம்பும் நோயற்றிருப்பவனுக்கு இந்த உடம்பு ஒரு வரப்பிரசாதம். இந்தச்சரீரம் முத்தி பெறுவதற்கு மூலம். திடமான உடம்பிலே திடமான மனம் என்பது ஆங்கிலப் பழமொழி. A sound mind in a sound body. சௌக்கியமின்றேல் சாந்தம் இல்லை. ஆத்மீக முன்னேற்றத்துக்குச் சௌக்கியம் அவசியம். வளமான நிலத்திலேதான் பயிர்கள் பயன்தரும். தேகசௌக்கியம் இளமைக்காலத்தே பேணப்படுதல் மிகவுமவசியம். ஆற்றலழிந்தவர் நொந்து சாவர். ஆத்மீக நெறியை அவசரமாக அந்தியகாலத்தில் நன்ருக அறிய முடியாது. நிதானம், பொறுமை, பயபக்தி, மனச்சாந்தி, தேகசுகம் என்பனவுள்ளவரே ஞானம் பெறற்குரியவர். அகத்தைச் செம்மைப்படுத்தப் புறமும் சுத்தமாய்ச் சுகமாயமையவேண்டும். சுகவாழ்வு அவசியம். மூளையும் முயற்சியும் அமைவதற்கு சுகவாழ்வு அவசியம். மருந்தென ஒன்று வேண்டாத வாழ்வு சுகவாழ்வு. தேகசுகம் கெட்டவருக்குப் பசியுண்டாக்க, உண்ட உணவு சமிபாடாக, உறக்கம் வர, உறக்கம் கலைய, எல்லாவற்றுக்கும் மருந்து தேவை. மருந்து அதிகப்பட உடம்பு தன்னியல்பழிந்து கெட்டுப்போகிறது. சுகவாழ்வு தவவாழ்வு.



## சிறு பயிர்கள்

வானம்பார்த்த வரண்ட பூமியில் சிறுபயிர்கள் செய்யலாம். வயலில் ஒரு பாத்தியில் வசதியாகக் கிணறு வெட்டினுல் பயறு, உழுந்து, மிளகாய், நிலக்கடலை, இஞ்சி, மஞ்சள், அவரை, துவரை, குரக்கன், எள், கம்பு, இறுங்கு எனப் பலவித பயிர்கள் செய்யலாம்.

### கிராமாபிவிருத்தி

விவசாயம், சுகாதாரம், கூட்டுறவு, குற்ற ஒழிப்பு, முதியவர் கல்வி, ஓய்வுநேர உபயோகம், குடிசைத் தொழில் என்பன கிராமங்களை முன்னேறச் செய்யும். இளைஞர்கள் இதில் ஊக்கம் கொள்ளுதல் மகத்தானசேவை என்பதோடு தலையாய கடமையுமாகும்.

### இளம் விவசாயிகள்

இன்று இளம் விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பாய் வளருகின்ருர்கள். நெற்செய்கை, வீட்டுத்தோட்டம், கோழி வளர்த்தல், பசு வளர்த்தல், தச்சு வேலை, தையல் வேலை, உணவு ஆக்கல், உணவு பதனிடல், நெசவு வேலை, பிரம்பு வேலை முதலியவற்றில் நல்ல பயிற்சி பெறுகிருர்கள். அராபியா முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகாமல் தாய் நாட்டை வளம்பெறச் செய்யும் இவர்கள் மாண்பு பெரிது. முழங்காவில் முதலிய பகுதிகளில் இளம் விவசாயிகள் அற்புதமாகப் பணிசெய்கிருர்கள்.

## வாக்குரிமை வயது ?

வாக்குரிமைக்கு வயது ஐம்பது என்கிருர்கள். அது சர்வசன வாக்குரிமைக்கு என்பது விளக்கம். படித்தவர்களுக்கு வாக்குரிமை கிடைத்து எழுபது ஆண்டுகளாய் விட்டன. சர்வசன வாக்குரிமைக்கு முன் இலங்கையில் நூற்றுக்கு நான்குவீதப் பேருக்கே வாக்குரிமையிருந்தது.

முன்னர் விதானையார் உடையார் நியமனங்களின் போது கையுயர்த்திச் சம்மதம் தெரிவித்தமை ஓரளவுக்கு வாக்குரிமையாகக் கருதப்பட்டது. தேசாதிபதி தமது சட்டசபைக்கு நியமித்த அங்கத்தவர்களையும் சங்கங்கள் சபைகள் கையுயர்த்தியே அனுப்பினர்கள். ஆறுமுகநாவலரின் துணிகரமான பேச்சினுல் பொன்னம்பலம் இராமநாதனுக்கு 1879 ஆம் ஆண்டில் அதிகமானேர் கையுயர்த்தினர்கள்.

மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் திருவோலக்கத்திலமர்ந்த ஐம்பெருங்குழு, எண்பேர் ஆயம் என்னும் அவைகளின் அங்கத்தவர்கள் குடவோலை மூலம் தெரியப்பெற்ருர்களாம். குடம் என்ருல் பானை. ஓலை பனையோலை நறுக்கு. குடம் பலற் பெட்டிபோலவும் ஓலைநறுக்கு பலற் பேப்பர் போலவும் இருந்தன. வாக்களித்தலுக்கு வயது தெரியாது.

★ தொண்டு செய்பவன் பெருவாழ்வுக்குரியவன் ★

# GREAT SAYINGS

1. Imagination is poor substitute fot experience.
2. The only way to have a friend is to be one.
3. Charecter is greater than intellegence.
4. A good tongue is a good weapon.
5. Mind employed is mind enjoyed.
6. Observation is the best teacher.
7. Man is the image of his thoughts
8. Bravery is a quality of the soul.
9. God is perfection of beauty.
10. All doors are open to courtesy.
11. The end of education is man making.
12. Anxiety is the rust of life.
13. Useless laws weaken necessary ones.
14. Prayers will succeed when thoughts are pure.
15. Discipline is the expression of culture.

## பட்டதாரிகளின் முன்னோடிகள்

கலாநிதி அழகப்பா செட்டியார் ஒருசமயம் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்தியபோது யாழ்ப்பாணத்தவரைப்பற்றிப் பெருமையாகவும் உள்ளன் போடும் குறிப்பிட்டார். முன்னர் 1857ம் ஆண்டில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் முதன் முதலாகப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பெற்றபோது சென்னையில் விஸ்வநாதபிள்ளை என்றும் தாமோதரம்பிள்ளை என்றும் இருவர் B. A. பட்டம் பெற்றுர்கள். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தவர்கள். விசுவநாதபிள்ளை குருவாகவும், தாமோதரம்பிள்ளை மாணுக்கஞகவும் பரீட்சை எழுதியபோது தாமோதரம்பிள்ளை குருவுக்கு மிஞ்சி விடையெழுதித் திறமைபெற்றவர். இப்பட்டதாரி முன்னோடிகளைத் தொடர்ந்து வேலுப்பிள்ளை முதலான யாழ்ப்பாணத்தவர்கள் பட்டங்கள்பெற்று ஓடிப்போகாமல் சென்னையிலேயே பெரிய உத்தியோகங்கள் வகித்தவாறு பல்கலைக்கழகத்தையும் தமிழையும் வளர்த்தவர்கள்.

## அமரர் லூதர் ஜேம்ஸ் செல்வராசா

அமரர் செல்வராசா எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. அவரிவர் என்று பாராமல் எவருக்கும் எந்தநேரத்திலும் தன்னுலியன்ற உதவியைச் செய்பவர். இலங்கைக் கைத்தொழிலபிவிருத்தித் திணைக்களத்தின் வடமாநில முகாமையாளராயிருந்து இவர் செய்த சேவை பெரிது. கூட்டுறவுத் துறையில் மகத்தான பணிசெய்த இவர் ரெனிஸ் ஆட்டத்தில் நிபுணர். அன்னாரின் மறைவின்பின் முதலாண்டு நன்றிப் பிரார்த்தனையில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். வடமாநில அரசாங்க அதிபர், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கூட்டுறவாளர்கள். தொழிலதிபர்கள் இன்னும்பலர் கூடிய வைபவத்தில், மில்க்வைற் தொழிலதிபர் அமரரின் நினைவாக ஏழாலைத் தேவாலயத்தின் வளவில் பெரிய (மலைவேம்பு) மகோகனி மரம் நாட்டி நினைவு செய்தார்.

## காட்டர் பெருமை

அமெரிக்க ஜனுதிபதிகளில் ஒருவரான ஜிம்மி காட்டர் கமத்திலிருந்து வெள்ளை மாளிகைக்குச் சென்றவர். முன்னர் தோமஸ் ஜெபர்சன் என்னும் ஜனுதிபதியும் வேளாண்மையிலிருந்து வெள்ளை மாளிகைவரை போனவர். காட்டருக்குத் தோட்டவேலையைவிடப் பலவித கலைத்துறைகள் எஞ்ஜினியறிங் துறைகள் கைவந்த பயிற்சிகள்; அணுவைப் பிளக்கவும் கப்பலோட்டவும் சங்கீதத்தை ரசிக்கவும் அவர் அறிந்தவர். சீவகசிந்தாமணியில் நாயகன் சீவகன் போல இவரும் எனலாம். ஆனுல் எட்டுத் திருமணங்களை இவர் செய்யவில்லை. காட்டர் 1-10-1924ல் பிறந்தவர் இவர் 1970ல் தேசாதிபதி நியமனத்துக்காக 1800 அரசியற்பேச்சுக்களைப் பேசிக் குடும்பசமேதராய் 600000 பேரைக்கண்டு கைகுலுக்கியவர். கறுப்புஇனமக்களின் ஆதரவுபெற்ற இவர் தேசாதிபதியாகி மாநிலத்தை நன்கு பரிபாலித்தவர். பின்னர் 2000 பிரதிநிதிகள் மத்தியில் தம் கொள்கையைப் பிரசாரம் செய்து ஜனநாயகக் கட்சிச்சார்பில் அமெரிக்கதலைவர் போட்டிக்கு நியமனம் பெற்றவர். குடியரசுக்கட்சிப் பிரமுகரும் தலைவருமான ஜெரால் போட் என்பாரை வென்று அமெரிக்காவின் முப்பத்தொன்பதாவது தலைவராக வெள்ளை மாளிகையை அலங்கரித்தவர்.

## உங்களுக்குத் தெரியுமா?

— விடைகள் வேறிடத்தில் —

1. மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி
2. மரதன் ஓட்டத்தின் நேரம்
3. வொல்கா நதி விழும் இடம்
4. வியாபாரக் காற்று சமப்படும் இடம்
5. அவுஸ்திரேலியாவின் பழைய பெயர்
6. பிக்பென் பெயர் வந்த காரணர்
7. கடல்மட்டத்தில் குறைந்த நாடு
8. சுதந்திரச் சிலையுள்ள நிலம்
9. உலகத்தின் முகடு
10. ரேபிள் ரெனிஸ் வேறு பெயர்
11. சோயாஅவரை அதிகமுள்ள நாடு
12. அமெரிக்க ஒக்ரா என்னும் மரக்கறி
13. நக்கிள்ஸ் மலைத்தொடர் உள்ள இடம்
14. உருளைக்கிழங்கின் பூர்வோத்திர நாடு
15. பொன் அதிகமுள்ள நாடு
16. சோவியத் என்பதன் பொருள்
17. மும்முறை நோபல் பரிசு பெற்றவர்
18. றப்பரைக் கடினமாக்கும் பொருள்

நிர்வாகத்தின் அதிகாரம் மனிதனுற் பொறுக்கமுடியாத அளவுக்குத் தீதாகும்போது, ஒரு மனிதன் தனது சுதந்திரத்தையேனும் தியாகஞ்செய்து அகிம்சையுடன் கூடிய எதிர்ப்பைச் சாதிக்கிறுன். — மகாத்மா காந்தி

★ ஒருமுகப்பட்ட மனம் பேராற்றல் பெறுகிறது ★

# தமிழ் வளர்த்த ஐரோப்பியர் சிலர்

## பிரான்சிஸ் வைற் எல்லீஸ்

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதிக் காலத்தில் 1796 ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்த இளம் உத்தியோகத்தருள் **எல்லீஸ்** என்பாரும் ஒருவர். தென்னிந்திய மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளையும் வடமொழியென்னும் சமஸ்கிருதத்தையும் மிகவிரைவில் பண்டிதர்களையடுத்துக் கற்றுத் தேறிப் பன்மொழிப் புலவராய் விளங்கிய இவர் தமிழில் செய்யுள் இயற்றும் ஆற்றலையும் வித்துவான் சாமிநாதபிள்ளை என்பாரிடம் பெற்றிருந்தார்.

கல்விச் சங்கத்தின் தலைவராய்க் கடமை பார்த்த இவர், பெரியவர்கள் பலருடன் நன்கு பழகி, அவர்களைக்கொண்டு தமிழ் ஏடுகள் பலவற்றைத் திரட்டிக் குவித்தார். திராவிட மொழிகளில் ஒப்பியல்பில் ஆராய்ச்சி செய்தும், தெலுங்கு மொழியின் இலக்கணம் பற்றி எழுதியும், மலையாளம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியும், தமிழ் உரைநடை பற்றிப் புலவர்கள் பலரின் ஆக்கங்களை ஆராய்ந்து எழுதியும், தென்னிந்திய வரலாற்றை ஆராய்ந்து தெளிவுபடுத்தியும், தமிழர் தத்துவம் என்னும் சைவசித்தாந்தம் பற்றியெழுதியும், பன்முகமாகப் பணிபுரிந்த மகத்தான சேவையின் முழுப் பயனையும் தமிழர் பேணிக்கொள்ளவில்லை.

தமிழ் நாட்டில் மதுரை மாநகரைப் பெரிதும் அபிமானித்த எல்லீஸ், மதுரையைத் தென்கோளார்த்த அதென்ஸ் மாநகரம் எனப் போற்றி மாவட்டம் முழுவதையும் நன்கறிவதற்கு யாத்திரை செய்தார். இராமநாதபுரத்தில் தவறுதலாக ஏதோ நச்சுப்பதார்த்தம் ஒன்றை அருந்திய எல்லீஸ் 1819 ஆம் ஆண்டில் அகால மரணமானுர்.

திருக்குறளை உலகத்தவர் நன்கறிவதற்குமுன் நன்கு நயந்த வெளிநாட்டவர் வெள்ளையர்களுள் எல்லீஸ் தனிச் சிறப்புப் பெற்றவர். அவர் எழுதிய திருக்குறள் விமர்சனம் (Thirukkural Ellies Commentary) என்னும் நூல் 1819 ஆம் ஆண்டில் 304 பக்கங்கள் உள்ள பெருவிருந்தாய் வெளிவந்தது. திருக்குறளின் முதற் பதின்மூன்று அதிகாரங்களுக்கு மாத்திரம் இத்தகைய பாரிய ஆய்வு எழுதிய அவர் நூல் முழுவதற்கும் எழுதியிருப்பாராயின் அது பத்து மடங்கு பெரியதாய் அமைந்திருக்கும். அந்தப் பாக்கியம் எமக்குக் கிடைக்கவில்லை.

எல்லீஸ் எழுதிய குறள் வளம் பல்லாண்டுக் காலமாகக் கிடைத்தற்கரிய நூலாக இருந்தது. இதனை மீண்டும் எல்லோருக்கும் கிடைக்கச் செய்யவேண்டும் எனக் கருதிய சென்னைப் பல்கலைக் கழகத்தார் 1955 ஆம் ஆண்டில் சொல்லின் செல்வன் கலாநிதி சேதுப்பிள்ளை அவர்களைக் கொண்டு பதிப்பித்தனர்.

எல்லீஸ் எழுதிய விமர்சனத்தை ஆறுமுகநாவலர் நன்கு பயின்றுள்ளார் எனக் கருதுவதற்கும் இடமுண்டு. நாவலர் எழுதிய பெரியபுராண சூசனம் ஓரளவுக்கு எல்லீஸ் போக்கை ஒத்துள்ளது.

எல்லீஸ் காலத்தில் தமிழ் நாட்டிற் பெரும் புலவராயிருந்த இராமச்சந்திரக் கவிராயரின் புலமைத்திறமையைக் குறித்து எல்லீஸ் பாடிய பாடல் ஒன்று ஆங்கிலேயரான அவரின் தமிழாற்றலைக் காட்டுகிறது.

''செந்தமிழ்ச் செல்வனு மோராயிரந்தலைச் சேடனும் யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும் யாவரும் தோத்திரஞ் செய்
கந்தனைச் சொல்லுங் கவிராமச் சந்திரனைக் கண்டுவெட்கி
அந்தர வெற்பிழி பாதாளந் தேடி யடங்கினரே.''

*(Cont')*

**The Tamil View of Life**

# An Introduction to Thiruvalluvar's KURAL

— S. NATESAN —

The Kural shows not only the moral insight of its author but also his vide learning and practical experience. A couplet under the chapter entitled **Destiny** in this work recalls, by its close similarity of thought and mode of expression, a verse In the **Dhamma Pada** which speaks about the divergence of the road leading to **wealth** and the road leading to **Nirvana.** Thiruvalluvar was no less familiar with the tenets of Budhism and Jainism than with those of the Hindu Philosophical systems. There is ample evidence to support the popular idea that he sought to provide a common meeting ground of these different schools of thought in the kural. He was well acquainted with sanskrit works. particularly those on Government the subject known as Artha Sastra. It is however, note worthy that in dealing extensively with this subject in kural, he does not adopt some of Machiarelian features of Kautilyas Artha Sastra. the well-known treaise in Sanskrit, but he insists that Government should always subserve the ends of justice and morality. He compares the minister who promotes his kings resources by questionable means to one who Iries to store up water in a pot of unburnt clay. His political maxims have a remarkable validity even in the changed circumstances of politics in the modern world. One cannot miss the authentic tone personal knowledge which is conveyed by Thiruvalluvar's maxims on the art of Government and one cannot help confirming the view which has been held by some scholars that he personally helped a prince, known as Elela Singam in governing a territory near Madras and that this prince might be identified with the famous Elara, who became a king of Ceylon and whose just rule is recorded in the Ceylon Chromicle Mahavamsa.

**(Will Follow)**

★ திறமை படைத்தவன் அதைத் தெரிவிப்பதில்லை ★



## ஔவை அருந்தமிழ்

★

### பனந்துண்டம் தளிர்க்கப் பாடியது.

சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர் உட்படப் பல்லாயிரவர் மத்தியில் அங்கவை சங்கவை என்னும் பெண்களுக்குத் திருமணம் நடைபெற்றது. மூவேந்தரும் மணமக்களுக்குப் பரிசுப்பொருள்களை நிறைய நல்கினர்கள் பின்னர் விருந்து நடைபெற்றது.

விருந்து நடைபெற ஒழுங்குகள் செய்துநின்ற ஔவை யாரிடம் மூவேந்தரும் நகைச்சுவையாகப் பேசினர்கள். ''பாட்டி எங்கள் நாட்டில் பூலோக கற்பகதரு பனையல்லவா. அது கேட்டதெல்லாம் தரும் என்பார்கள். எங்களுக்கு இன்றைய விருந்தில் பனம்பழமும் தருதல்வேண்டும் தருவாயா''? என்று கேட்டார்கள்.

பனை பருவகாலத்திலேதான் பழம்தரும் என்று கூறுவதற்கு ஔவையார் விரும்பவில்லை. அவர் உடனே ''தரலாம்'' என்று கூறினர். அங்கே மணப்பந்தலுக்கு எடுத்தவைபோக எஞ்சிக்கிடந்த பனந்துண்டம் ஒன்றை எடுத்து நிலத்தில் நட்டார். இறைவனை வணங்கினர். பனந்துண்டத்தை நோக்கினர். பனந்துண்டமே, சந்திரன்போன்ற வெண்கொற்றக்குடையுடைய சேரன், சோழன், பாண்டியன், என்னும் மூவேந்தரும் மணப்பந்தலிலே அங்கவை சங்கவை ஆகிய மணப்பெண்களுக்கு அறுகிட்டு வாழ்த்த வந்திருக்கிருர்கள். நீ சங்குபோன்ற வெண்ணிறமுள்ள குருத்துவிட்டு, சலசலவென்ற ஒலியுடன் பச்சோலை தழைக்கப்பெற்று, நுங்குகள் முதிர்ந்த கண்ணுடையனவாகவும், அடியிலே கருநிறமும் நுனியில் சிவப்புநிறமும் உடையனவாக ஒவ்வொருவருக்கும் மூன்று பழங்கள் தருவாயாக.

திங்கட்குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் முர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்தீன்று பச்சோலை சலசலத்து
நொங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

---

**உங்களுக்குத் தெரியுமா ? விடைகள்**

1. ஏஞ்சில் வெனிசூலா. 2. இரண்டரைமணி 3. கஸ்பியன் கடல் 4. சமரேகை. 5. புதிய ஒல்லாந்து 6. சேர். பென்சமின்ஹேறால் 7. ஒல்லாந்து 8. பெட்லோ தீவு 9. திபெத் 10. பிங்பொங் 11. சீன 12. வெண்டி 13. கண்டி மாத்தளை 14. தென்னமெரிக்கா 15. தென்னுபிரிக்கா 16. தொழிலாளி 17. அல்பேட்சுவைற்சர் 18. கெந்தகம்.

## புத்தகப் புதினம்

பத்திரிகைப் புதினத்திலும் பார்க்கப் புத்தகப் புதினம் ஆழமானது. ஆறுதலானது. அவசரமில்லாதது. நல்லதொரு புத்தகத்தை எடுத்து, ஒரு மூலயிலமர்ந்து வாசிப்பவர் ஒருவகை யோகசாதனம் உண்டாவதை அறிவர். புத்தகத்தில் லயித்தவருக்கு வெளிப்புதினம் தெரியாது.

நல்ல புத்தகத்தின் நல்ல புதினம், மொழிகள் பல வாயினும் குரல் ஒன்றே என்பதாகும். சிந்தனையை வெளிவிடுவதற்கு வாகனமாய் அமைந்தது மொழி. உலக மொழிகள் ஒருபுறமிருப்ப, இந்தியாவில் பதினறு மொழிகள் பாரத தர்மத்தை ஒரே குரலில் வெளியிடுகின்றன. எங்கள் நாட்டில் இரண்டே இரண்டு மொழிகள் ஒரு குரலாய் ஒலிப்பக்கேட்க முடியவில்லை.

★ ★ ★

முற்காலத்தில் திருக்கோயில்கள் மக்களுக்குச் செய்த பன்முகத் தொண்டுகளில் நூலறிவித்தலும் ஒன்று. கோயிலில் ஒரு பிராகாரத்தில் ஏடுகள் இருந்தன. விரும்பினேர் ஆசாரசீலராய் அவ்விடத்தில் தமக்குத் தேவையானவற்றைப் படித்துவந்தார்கள். அந்தப் பழைய பண்பாட்டு முறையினை முன்னுள் மந்திரியார் பக்தவத்சலம் மயிலாப்பூர் கபாலீஸ்வரத்தில் ஆரம்பித்து வைத்துத் திருக்கோயிலும் ஒரு பல்கலைக்கழகம் என நிரூபித்து நிலவவைத்தார்.

### ஆங்கிலத்தைச் சுவையுங்கள்

ஆங்கிலம் சுவைமிக்க அருமையான மொழி அதன் உலகவியாபகமும் சுருங்கிய சொல்லில் விளங்கவைக்குந் திறனும், ஒப்புயர்வற்ற சிறந்த புலவர்களின் பலவகைப் படைப்பும் அதனைப் பெருவளமுள்ள மொழியாக்கியுள்ளன. ஆங்கிலம் வல்ல இந்தியரும் இலங்கையரும் ஒரு தலை முறைக்காலத்துக்கு முன்னர் இருந்தார்கள். மேலெழுந்தவாரியாகக் கூறின் ஸ்ரீநிவாசர், சத்தியமூர்த்தி, இராமசாமி ஐயர் பேச்சாற்றல் எழுத்தாற்றல் வல்லவர். வடஇந்தியப் பெரியார்கள் ஒரு புறம் இருப்ப. தென்னிந்தியருள் வெங்கடரமணியின் ஊசிக்குடுமி அசைந்தால் ஆங்கிலத் தேன்வதை சொட்டுச்சொட்டாய் வடியும் முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன், காகிதப்படகுகள், மணற்கும்பி, சம்புவுடன் ஒருநாள் என்பன போன்ற நூல்களை ஒருமுறையல்ல பலமுறை வாசிக்கலாம் அலுப்புத்தட்டமாட்டா.

---

### பிழை திருத்தம்

மே மாதத்துச் செய்தியில் ஆரும் பக்கத்தில் அப்புத்தலம் என்பதை அக்கினிஸ்தலம் எனத் திருத்திப் படிக்கவும். தவருக வந்த பிழைக்கு மன்னிக்கவும்.

— க. சி. கு.

---

★ கெட்ட வழியை விலங்குகளும் விரும்பமாட்டா ★



## தம்பதிகள் நீடுவாழ்க

மில்க்வைற் தொழிலகத்தில் வேலைபார்க்கும் சாரதி திரு. தருமலிங்கம் அவர்களின் மைந்தர் திரு. குணலிங்கம் அவர்கள், செல்வி சுமதி அவர்களை 27-3-81ல் திருமணம் செய்தவேளை சமூகமளித்திருந்த தொழிலதிபர் மணமக்களுக்கு மங்கலம் பொலிய மாலைசூட்டி ஆசீர்வதித்தார். மணமக்கள் எல்லாப் பேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வராக என்று கோசாவில் பிள்ளையார் திருவடிகளை வழுத்துகின்றோம்.

---

## ஏடுகளுக்குப் பாதுகாப்பான இடம்

ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, கனகசபைப் பிள்ளை, சுவாமிநாத ஐயர் முதலிய பெரியவர்கள் பழைய ஏடுகளைத் தேடியெடுப்பதில் அரிய முயற்சி எடுத்தவர்கள். ஒரு நூலைப் பிழையறப் பதிப்பதற்குப் பத்துப் பதினைந்து ஏடுகளைப் பரிசீலனை செய்தனர். ஏடு தேடியவர்களுள் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களின் முயற்சி மிகவும் பெரிது. அவர் தேடியெடுத்துப் பயன் செய்த ஏடுகள் ஏறக்குறைய 2000 என்பர்.

ஐயரவர்கள் மறைந்தபின் அடையாறு என்னும் இடத்திற்கு அண்மையில் அமைக்கப்பெற்ற நூலகத்தில் 1926 ஏடுகள் உள்ளன. இவை ஐயரவர்களின் மைந்தரால் உபகரிக்கப் பெற்றன. ஸ்ரீமதி ருக்மணிதேவி அவர்களை அத்தியட்சராகவும் கல்யாணசுந்தரம் அவர்களை நூலகராகவும் கொண்ட இந்நூலகம் 5-7-1943 இல் திறந்துவைக்கப் பெற்றது. இங்குள்ள மூல ஏடுகள் காலந்தோறும் அச்சிடப்பெற்று வருகின்றமை தமிழருக்குப் பெரிய வரப்பிரசாதம். இத்தகைய ஏடுகளை யாழ்ப்பாண மன்னர் நாயன்மார்கட்டு என்னும் இடத்தில் முன்னர் சேகரித்து வைத்திருந்தார் என்பது வரலாறு.

## சிவானந்த குருகுலம்

யாழ்ப்பாணத்து நீராவியடி ஒரு பழம்பதி. நீராவிப் பிள்ளையார் மீது சேனாதிராய முதலியார் பிரபந்தங்கள் பாடியுள்ளார். நாட்டுக்கோட்டைச் செட்டிமார் நமக்குச் செய்த சேவைகளில் இப்பிள்ளையாரும் ஒன்று.

நீராவிப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்கில் கடையிற் சுவாமியார் கோயில் மிகவும் அற்புதமானது. மனவடக்கம், தியானம் முதலியனவுக்கு அமைவான இடம் இந்தச் சமாதிக்கோயில். கடையிற் சுவாமியாரின் சமாதிக்கு அண்மையில் சிவானந்த குருகுலம் அமைந்துள்ளது. பிராமணக் குருமாரை உருவாக்குவதற்கு வேதம் வல்லவர்கள், ஆகமம் வல்லவர்கள், பத்ததி வல்லவர்கள் புரவலர் உபகரிப்பைப் பெற்று இக்குருகுலத்தை நடத்தி வருகிறார்கள்.

குருகுலப் பாடசாலையின் புதிய கட்டடத்தைச் சென்ற 6-5-81 இல் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி சைவசமய சம்பிரதாயம் பொலியத் திறந்து வைத்தார்கள். இப்பாடசாலைக்கு வேண்டிய நிலத்தைப் பெருந்தன்மையோடு உபகரித்தவர் முன்னாள் மருந்துக் கடைப் பேரம்பலச் செட்டியார் எனப் புகழ்பூத்த செம்மலின் மைந்தர் சுப்பிரமணியச் செட்டியாராவர். சுப்பிரமணியச் செட்டியார் இத்தருமகைங்கரியத்தை அமைதியாகச் செய்து வைத்தமை மதிப்புக்குரியதாகும்.

இந்நிலத்தில் இக்கட்டடத்தை உருவாக்குவதற்கு பல்லாயிரக் கணக்கில் உபகரித்த மூவர் பெயர்களைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள், எஸ். ரி. ஆர். பில்ம்ஸ் தியாகராசா அவர்கள், புன்னாலைக் கட்டுவன். கே. இளையதம்பி அவர்கள் நல்ல வழியில் உபகரித்துள்ளார்கள். மில்க்வைற் தொழிலதிபரின் உபகரிப்பினாலமைந்த நூலகத்தை யாழ் மாநகர மேயர் திறந்துவைத்துப் பாராட்டியுள்ளார்.

---

## சென்றநூற்றாண்டில் பெரியார்ஒருவர்மறைவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருவும், கச்சேரியில் பெரிய மணியகாரனும் முதலியாராயும் இருந்தவரும், சட்டத்துறையில் மெத்தப் பிரகாசித்தவரும், கூழங்கைத் தம்பிரான் என்னும் கனகசபாபதி யோகியின் பிரதம சீடனும், ஏகசந்தக்கிராகி எனப் புகழ் பெற்ற நினைவாற்றல் வாய்ந்த இருபாலை நெல்லைநாத முதலியாரின் மைந்தருமான சேனாதிராய முதலியார் 4-1-1840ல் மரணமான செய்தி நாட்டு மக்களை வெகுவாக வருத்தியது.

தமிழ்ப் புலமையோடு சமஸ்கிருதம் சிங்களம் ஆங்கிலம், போத்துக்கேயம், ஒல்லாந்தம், ஹிபுறு பிறெஞ்சு முதலிய பன்மொழிப் புலமையும் உள்ள இவர் ஒரு புலவர். நல்லூர்க் கந்தசுவாமியார் மீதும், நீராவியடிப் பிள்ளையார் மீதும் பல பிரபந்தங்கள் பாடியவர் இவர் வழிவந்த பெரியார்கள் இன்றும் பெருந்தன்மையுள்ளவர்களாய் வாழுகின்றார்கள்.

---

★ மனிதனின் செயலை மனச்சாட்சி கவனிக்கிறது ★



## பனைச்சம்பந்தம்

பாரத நாட்டுக்கும் ஈழநாட்டுக்கும் சமய சம்பந்தம் மொழிச் சம்பந்தம், பண்பாட்டுச் சம்பந்தம், இராமாயண சம்பந்தம் எல்லாம் இணைப்புக்கு மேல் இணைப்பாக அமைய இப்பொழுது பனைச்சம்பந்தம் ஒன்று சம்பவித்துள்ளது.

தமிழ் நாட்டுப் பனையபிவிருத்தித் துறையின் சிறப்பு அலுவலரான உயர்திரு. க. சம்பந்தம் அவர்கள் புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும் என்னும் திருக்குறட் பண்பாட்டு முறையில் இப்பால் ஈழத்தில் பனைவளம் பெருக்கிவரும் பண்பிலோங்கிய மில்க்வைற் தொழிலதிபர் கனகராசாவோடு பழகி, அண்மையில் நிகழ்ந்த ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் மிகநெருங்கியவராய் விட்டார்,

ஐந்து கோடிக்கு அதிகமான பனைகளில் பொருளாதார வளம் பெருக்கும் சம்பந்தம் அவர்கள் பனை வளத்தை உலகறியச் செய்த நிபுணர். அவர் அண்மையில் சென்னையில் திருவாட்டி நாகம்மா கனகராசா அவர்களிடம் அறிந்த பனம்பண்டத் தயாரிப்பு முறைகளைப் பரீட்சித்துப் பெரும் பயன் கண்டதாக எழுதியுள்ளார். இம்முறைகளை உள்ளடக்கிக் குறிப்புப் புத்தகங்கள் எழுதி வருகிறார். இங்குள்ள பனையபிமானிகள் அழைத்தால் அவர் இங்கு வருகைதந்து எமக்கு வாய்ப்பான பல ஆலோசனைகளைக் கூறுவதோடு பனை வளத்தால் செல்வம் பொலியச் சிறு கைத்தொழில்களைக் காட்டியுந்தருவார். பனையபிமானிகள் விரும்பினால் அவருக்கு எழுதி அழைக்கலாம். அவர் விலாசம்: க. சம்பந்தம் சிறப்பு அலுவலர், 108, கெங்குரெட்டிசாலை, எழும்பூர், சென்னை. 600 008.

## பத்தொன்பதாம் நூற்றாண்டில்

### றோயல் கல்லூரி

இன்று றோயல் கல்லூரி எனப் பிரசித்தி பெற்ற இராசாங்கக் கல்லூரி, கொழும்பு அக்கடமி என்னும் பெயரில் 26-10-1836 இல் ஆரம்பிக்கப் பெற்றது. இது ஆரம்பகாலம் முதலாகவே கல்வித்துறையில் அளப்பரிய சேவை செய்து வந்துள்ளது. வருடந்தோறும் வளர்ச்சியுற்ற இக்கல்லூரியில் வெள்ளைக்காரர் தங்கள் சிறார்களை ஆரம்ப காலத்தில் கற்கவைத்தனர். பின்னர் சுதேசிகளுள் செல்வம் செல்வாக்கு உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைத்தனர், விளையாட்டுத் துறையிலும் றோயல் கல்லூரி புகழீட்டி வந்துள்ளது.

இங்கே படிக்கும் மாணவர்களுள் எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்றுச் சிறப்புநிலை எய்தியவனுக்கு ரேணர் என்பார் ஒருவரின் நினைவாகப் புலமைப் பரிசில் வழங்குதல் மரபு. ரேணர் பரிசு பெற்றுப் புகழ் பூத்தவருள் தமிழ்க் குடும்பத்தாருக்குப் பெருமை தேடித்தந்தவர்கள் அருணாசலம் குடும்பத்தாராவர். முன்னர் மாமன் முத்துக்குமாரசுவாமி 1851 ஆம் ஆண்டிலும், அருணாசலம் 1870ஆம் ஆண்டிலும், பின்னர் மகாதேவா 1903ஆம் ஆண்டிலும், அதன் பின் பாலகுமார் 1938 ஆம் ஆண்டிலும் ரேணர் புலமைப் பரிசைப் பாரம்பரியமாகப் பெற்று வந்தனர். அண்மையில் ஆனந்தகுமார் 1968 ஆம் ஆண்டில் அதனை விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஒன்றுண்டாயது என விடயமறிந்தவர் கூறினார்.





மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள்
கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே உதவுகிறது


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-6-81.